## திராவிட இயக்க இதழ்கள் - முகில்



எட்டாம் வகுப்பு படிக்கும் போதே, கல்லக்குடிப் போராட்டத்தில் பங்கேற்று தண்டவாளத்தில் அமர்ந்தவர், புலவர் பெ.அ.இளஞ்செழியன். கரந்தை புலவர் கல்லூரியில் பயின்ற இவர், பின்னர், சில காலம் தமிழாசிரியராக இருந்தார். அவரால் தொடங்கப்பட்ட இதழ், ‘முகில்’.

அந்த இதழை 1968-ஆம் ஆண்டு தொடங்கினார். அதற்கு அவர்தான் ஆசிரியராகவும் இருந்தார். இலக்கிய இதழாக மலர்ந்த அது, மாத இதழாக திருச்சியிலிருந்து வெளிவந்தது. அதன் தொடக்க இதழை இனமானப் பேராசிரியர் அவர்கள் வெளியிட்டார்.

பிறகு 1974 முதல் 1987 வரை அந்த இதழை, சென்னையிலிருந்து நடத்தினார். அந்த இதழ் பெரும்பாலும், அட்டையில் திராவிட இயக்கத் தலைவர்களின் படங்களைத் தாங்கி வந்தது. பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்தபோது, அடுத்து வந்த இதழின் அட்டை, கருப்பு வெள்ளையில் வெளியானது. அட்டையில் அண்ணாவின் படம் போட்டு, அதன் கீழே இரங்கல் கவிதை அச்சிடப்பட்டிருந்தது.

## :ப்ளாஷ்பேக்





இரா.காபிரியேல்

### வருகையும் சந்திப்பும்!

2012-ஆம் ஆண்டு விருதுநகர் மாவட்டத்துக்கு வருகை தந்த இன்றைய கழகத் தலைவர் அவர்களை நான் சந்தித்த போது எடுக்கப்பட்ட படம் இது. அன்று நான் சாத்தூர் கிழக்கு ஒன்றிய ஆதி திராவிடர் நலக்குழுவின் துணை அமைப்பாளராக, கழகப் பணியாற்றினேன். அதன் பிறகு சாத்தூர் ஒன்றிய பிரதிநிதியாகவும் தற்போது சாத்தூர் கிழக்கு ஒன்றிய மாணவர் அணித் துணை அமைப்பாளராகவும் சமத்துவபுரம் கிளைக் கழகச் செயலாளராகவும் கழகப் பணியாற்றுகிறேன்.

**–இரா.காபிரியேல், கிளைக் கழகச் செயலாளர், விருதுநகர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### அஞ்சல் தலையில் தமிழ்!


1970-ஆம் ஆண்டு பிப்ரவரி 3-ஆம் தேதி அண்ணாவின் நினைவு நாளையொட்டி சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் ‘அண்ணா அஞ்சல் தலை’ வெளியீட்டு விழா நடைபெற்றது. அந்த அஞ்சல் தலைக்காக ஒன்றிய அரசு அண்ணாவின் படத்தைக் கேட்டிருந்தது. அண்ணாதுரை என்ற கையெழுத்தோடு இருக்கும் படத்தை அனுப்பி வைத்தார் கலைஞர். அண்ணாவின் அஞ்சல் தலையில் தமிழும் இடம் பெற்றது.

## முதல் முதலில் 3

**ந.வினோத்குமார்**

திராவிட இயக்க அடையாளங்களை, நடைமுறைகளைப் பற்றி விளக்கும் ‘திராவிட மரபு’ தொடர் இது...







# மாநாடும் மாதரும்!

திராவிட இயக்க மாநாடுகளில் கொடி ஏற்றுதலும், மாநாட்டைத் திறந்து வைப்பதும் மிக முக்கியமான நடைமுறைகள். சமீபத்தில், நடைபெற்ற தி.மு.க. இளைஞர் அணி 2-வது மாநில மாநாட்டில், கழகத் துணைப் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி அவர்கள் மாநாட்டுக் கொடியை ஏற்றி வைத்தார்.

மகளிர் அமைப்புகள் நடத்தும் மாநாடுகளில் மகளிர் கொடி ஏற்றி வைப்பது பெரிய விஷயமில்லை. ஆனால், இளைஞர் அணி மாநாடு போன்ற பொதுவான ஒரு மாநாட்டில் பெண் தலைவர் ஒருவரை முன்னிறுத்துவது என்பது இதர கட்சிகளுக்கும் இயக்கங்களுக்கும் புதிய விஷயமாகவும், பெரிய விஷயமாகவும் இருக்கும். திராவிட இயக்கத்துக்கோ அது இயல்பிலேயே வளர்ந்த ஒரு மரபணு!

ஆம்... 1931 நவம்பர் 29 அன்று சென்னையில் சுயமரியாதை மாநாடு நடைபெற்றது. அதில் மாநாட்டுத் திறப்பாளராக திராவிட இயக்கப் போராளி எஸ்.குஞ்சிதம் அவர்கள் முன்னிறுத்தப்பட்டார். அதேபோல 1944-ஆம் ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்ற சென்னை சுயமரியாதை மாநாட்டில் கனகம்மை அவர்கள் மாநாட்டுத் திறப்பாளராக இருந்தார். போலவே 1945-ஆம் ஆண்டு டிசம்பர் 9 அன்று நடைபெற்ற வட ஆற்காடு மாவட்ட திராவிடர் கழக முதல் மாநாட்டை ஆதிலட்சுமி அம்மையார் அவர்கள் திறந்து வைத்தார்.

மேலும், 1945- ஆம் ஆண்டு செப்டம்பர் 29 திருச்சியில் நீதிக்கட்சியின் 17-வது மாநில மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில் நீதிக்கட்சியின் தராசுக் கொடியை ஏற்றிவைத்தவர் மிராண்டா கஜேந்திரன் அவர்கள்.

**மாநில அளவிலான மாநாடுகள் மட்டுமல்லாது, மண்டல அளவிலான மாநாடுகளிலும் பெண் தலைவர்களே கொடியேற்றுவது மரபு.**

1944 -ஆம் ஆண்டு நீதிக்கட்சி, ’திராவிடர் கழகம்’ என்று பெயர் மாற்றம் கண்டது. அதற்குப் பிறகும் நீதிக்கட்சியின் தராசுக் கொடியே திராவிடர் கழகத்தின் கொடியாகப் பயன்படுத்தப்பட்டு வந்ததை எதிர்த்து முதல் குரல் கொடுத்தவரும் அதே மிராண்டா கஜேந்திரன் அவர்கள்தான். 1944- ஆம் ஆண்டு, சேலத்தில் நடைபெற்ற மாநாட்டில் அவர் அந்தக் கருத்தை முன் வைத்தார். இறுதியாக, 1945-ஆம் ஆண்டு மாநாட்டில் அந்தக் கொடி, அவரால் கடைசி முறையாக ஏற்றப்பட்டது. பிறகு, திராவிடர் கழகத்துக்குப் புதிய கொடி பிறந்தது.

மாநில அளவிலான மாநாடுகள் மட்டுமல்லாது, மண்டல அளவிலான மாநாடுகளிலும் பெண் தலைவர்களே கொடியேற்றுவது மரபு. அப்படிக் கடந்த காலங்களில் கழகத்தின் பெண் நிர்வாகிகள் கொடியேற்றியதற்கான வரலாற்றுச் சாட்சியங்கள் இங்கே படங்களாக...!

,,,அடையாளம் அறிவோம்.

## பாசறை படிப்பறை

**கௌதம் ராஜ்** 3

“புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்” என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...

# ‘ஞாலம்’ கருதியவர்!



19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிறந்து, அந்த நூற்றாண்டு இறுதி வரை நிறை வாழ்வு வாழ்ந்தவர், அத்திப்பாக்கம் வேங்கடாசல நாயகர். மெட்ராஸ் மாகாணத்தில் 19-ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற சமூக-அரசியல்-பொருளாதார மாற்றங்களை இவரது வாழ்க்கையைக் கொண்டு மதிப்பிடலாம்.

விளிம்புநிலை மக்களின் நில உரிமைக்காகவும், தமிழ்ச் சமூகத்தைப் பீடித்திருந்த மூடப் பழக்க வழக்கங்களை ஒழிக்கவும், பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்பவும் தன் வாழ்நாளின் பெரும் பகுதியை முதலீடு செய்த அத்திப்பாக்கம் வேங்கடாசலனாரைப் பற்றிய நாவல்தான் எழுத்தாளர் தமிழ்மகன் எழுதிய ‘ஞாலம்’. புனைவு என்று சொல்லப்பட்டாலும், பல அத்தியாயங்களில் நேரடி வரலாற்றைச் சொல்வதன் மூலம் அல்புனைவுத் தன்மையினையே இந்நூல் கொண்டிருக்கிறது.

சென்னையின் முதல் ரயில் அவரது வீட்டுக்கு அருகிலிருந்து தொடங்குகிறது. பக்கிங்காம் கால்வாய், நீதிமன்றம், துறைமுகம், அச்சகம், கொத்தவால் சாவடி சந்தை எனப் பெரும்பாலான கட்டமைப்புகளுக்கு அவரது வீடே மையமாக இருந்துள்ளது.

‘கண்மூடி வழக்கம் எல்லாம் மண் மூடிப் போக’ என்று சமரச சுத்த சன்மார்க்க சங்கம் கண்ட இராமலிங்க அடிகள் வேங்கடாசலனாரின் பக்கத்துத் தெருவில் வசித்தவர். மிஷனரி பள்ளியில் ஆசிரியராக இருந்து, சுண்ணாம்புத் தொழிலில் இறங்கி சமூகத் தொண்டில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார் வேங்கடாசலனார்.

1860-களில் நிலம் பறிக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களின் நில உரிமைக்காக ‘பாயக்காரிகளுக்கும் மிராசுதார்களுக்கும் உண்டாயிருக்கிற விவாதம்’ என்ற நூலையும், இந்து மதத்தில் நிலவும் மூட நம்பிக்கைகளுக்கு எதிராக ‘இந்து மத ஆசார ஆபாச தரிசினி’ என்ற நூலையும் எழுதினார் வேங்கடாசலனார். இதைத் தொடர்ந்து ‘சென்னை இலௌகீக சங்கம்’ தொடங்கப்படுகிறது, ‘தத்துவவிவேசினி’ என்ற தமிழ் இதழும், ‘தி திங்கர்’ என்ற ஆங்கில இதழும் பல்வேறு பகுத்தறிவு-அறிவியல் கருத்துகளைக் கொண்டு வெளிவருகின்றன.

**சாதி-மதப் பிற்போக்குத் தனங்கள் நிறைந்திருந்த தமிழ்ச் சமூகத்தின் 19-ஆம் நூற்றாண்டை இந்நூல் நம் கண் முன் நிறுத்துகிறது.**

விளிம்பு நிலை மக்களின் நில உரிமைக்காக வேங்கடாசலனார் மேற்கொண்ட மெனக்கெடல்கள் இந்நூலின் பெரும் பகுதியை ஆக்கிரமித்துள்ளன. வரலாற்றுக் குறிப்புக்கள் அத்தனையும் சான்றோடு அத்தியாயத்தின் முடிவில் அடிக்குறிப்பாக இடம்பெற்றுள்ளன. இடையிடையே அவரது குடும்ப வாழ்க்கை எப்படியாக இருந்தது என்பதை விவரிக்கும் பகுதிகளும் புனைவாக வந்து செல்கின்றன. காலனிய அதிகாரிகளிடம் நில உரிமை சார்ந்த கோரிக்கைகளைத் தொடர்ச்சியாக எழுப்பி வந்ததையும், இறுதியாக இவரது முயற்சிகளுக்குப் பலனளிக்கும் வகையில் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்குப் பட்டா வழங்கப்பட்டதையும் இறுதி அத்தியாயம் நமக்களிக்கிறது.


ஞாலம் என்ற சொல்லுக்கு உலகம், உயர்ந்தோர் என்ற இருவேறு பொருட்கள் உள்ளன. அந்த வகையில், அத்திப்பாக்கம் வேங்கடாசலனார் என்ற மாமனிதரின் கதையையும், நிலத்தைத் தங்களது உலகம் என்று நினைத்து உழைத்துத் தேய்ந்த ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வியலையும் இந்நூல் மிகச் சிறப்பாக நமக்குக் கடத்துகிறது. 19-ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற நில உரிமைப் போராட்டத்தை வரலாற்றுச் சம்பவங்களைக் கொண்டு சுவாரசியம் குறையாமல் கதையாக்கும் இந்நூல் அவசியம் வாசிக்கப்பட வேண்டிய ஒன்று.

,,,வாசிப்போம்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

422

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.